<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>சி.சி.எண். 9/2022</u>

2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 08ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.சௌந்தர்பாண்டி உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நந்தினி | வயது | 49 |
| த.பெ.(அ)க.பெ. | சம்பத் | தொழில் | இல்லத்தரசி |
| ஊர்/பணிபுரியுமிடம் | தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியம் – பகுதி 1 | சமயம் | |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

**<u>முதல் விசாரணை :</u> 1, 3ம் எதிரிகள் ஆஜர், 2ம் எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.**

நான் நான் திருப்பத்தூர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதி–1 ல் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். எனது கணவர் மின்வாரியத்தில் செயற்பொறியாளராக பணி செய்கிறார். கடந்த 09.09.2021 அன்று வியாழக்கிழமை காலை சுமார் 10.00 மணி இருக்கும். நானும் எனது மகள் ஷாலினியும் வீட்டிலிருந்தோம். நான் குளிப்பதற்காக வீட்டின் முன்கதவை பூட்டிவிட்டு குளிக்க சென்றுவிட்டேன். எனது மகள் நீட் தேர்விற்காக வீட்டின் முன் அறையில் படித்துக்கொண்டிருந்தார். அப்போது யாரோ சிலர் வந்து வீட்டின் கதவை தட்டி உள்ளார்கள். எனது கணவர் பெயரை சொல்லி சம்பத் சார் என்று அழைத்துள்ளார்கள். அதற்கு எனது மகள் அப்பா அலுவலத்திற்கு சென்றுவிட்டார் என்று கூறி உள்ளார். அதற்கு எனது மகளிடம் உனது அப்பாதான் அனுப்பி உள்ளார் என்று சொன்னதும், எனது மகள் கதவை திறந்துவிட்டார். அதன் பிறகு என் மகள் நான் குளித்துக்கொண்டிருந்த படுக்கை அறையின் கதவை தட்டி என்னை அழைத்தார். அப்பா யாரையோ அனுப்பி உள்ளதாக என்னிடம் சொன்னார். நான் கதவை திறந்துவிட்டு வெளியில் வந்தேன். நான் வந்து பார்த்த போது 3 நபர்கள் வீட்டின் ஹாலில் நின்றுக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் எதற்காக வந்துள்ளீர்கள் என்று கேட்டேன். அப்போது கொரணா சமயம் என்பதால் மருந்து அடிப்பதற்காக எனது கணவர் அனுப்பியுள்ளதாக சொன்னார்கள். மருந்து அடிப்பதற்கான ஒரு கிட் வைத்திருந்தார்கள். எங்கள் வீட்டில் அவ்வாறான மருந்து அடிப்பதற்கான வேலை இல்லை என்று சொல்லி எதற்கும் எனது கணவரை போன் செய்து கேட்டுக்கொள்கிறேன் என்று கூறியவாரே போனை எடுத்தேன். அப்போது 3 நபரில் ஒரு நபர் கையிலிருந்த போனை பிடுங்கி கீழே எறிந்துவிட்டார். அதே

சமயம் மற்றொரு நபர் கதவை உள்புறமாக நின்று தாழீட்டு விட்டுார். என்னையும் எனது மகளையும் பீளிச்சிங் பவுடரை கையில் கொண்டு வந்து இரண்டு நபர்கள் எங்கள் முகத்தின் மீதும் வாயின் மீதும் வைத்து அழுத்தினார்கள். அப்போது மீதம் இருந்த மற்றொரு நபர் ஒரு பெரியை பையை கொண்டு சென்று படுக்கை அறையில் வைத்தார். அந்த 3 நபர்களை என்னால் பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். 3 பேரையுமே நான் வீட்டில்வைத்து பார்த்ததால் அவர்களை நன்கு அடையாளம் தெரியும். ஆஜர் 1 மற்றும் 3 எதிரிகளை காண்பித்து சாட்சி அடையாளம் காண்பித்தார். எனக்கு மற்றொரு நபரையும் அடையாளம் தெரியும், அவரை நேரில் பார்த்தால் கூற முடியும். மேலும் எதிரிகள் எங்கள் வீட்டிலிருந்த சமயம் அவர்களுக்குள் பேசிக்கொண்டதை வைத்து அவர்களின் பெயர் எனக்கு தெரிந்தது. இங்கு வராத மற்றொரு எதிரியின் பெயர் முருகன். ஆஜர் எதிரியில் 1ம் எதிரிதான் எனது முகத்தை அழுத்தி பிடித்துக்கொண்டிருந்தார். 3ம் எதிரி எனது மகளின் முகத்தில் பிளிச்சிங் பவுடர் போட்டு அழுத்தி பிடித்துக்கொண்டிருந்தார். 1ம் எதிரி அவரது கையில் கத்தி ஒன்றை வைத்திருந்தார். அதை என்னிடம் காட்டி மிரட்டி வீட்டில் உள்ள நகைகளை அவர்கள் எடுத்து வர சொன்னார்கள். 2ம் எதிரி முருகன் வைத்த பையில் பிளிச்சிங்க பவுடர் மற்றும் ஒரு பெரிய கயிறு இருந்தது. எனக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு கத்த ஆரம்பித்தேன். மேலும் எதுவாக இருந்தாலும் என்னை செய்யுங்கள் என் மகளை விட்டுவிடுங்கள் என்று உயரமாக உள்ள 1ம் எதிரியை காண்பித்து அவர்தான் அப்படி கூறினார் என்று சாட்சியம் அளிக்கிறார். என் சத்தம் கேட்டு பக்கத்து வீட்டார் வினோதினி மற்றும் அவர் வீட்டிற்கு பால் ஊற்ற வந்த பால் காரர் ஆகியோர் வந்து எனது வீட்டின் கதவை தட்டினார்கள். உடனே கதவை திறந்து எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அப்போது என் கழுத்தையும் என்னுடைய மகள் ஷாலினியின் கழுத்தையும் எதிரிகள் பிடித்து அழுத்தியதாலும், அபபோது எங்கள் முகத்தில் பிளிச்சிங் பவுடரை வைத்து அழுத்தியதாலும் எங்களுக்கு அதிக மூச்சு திணறலும், அதிக வலியும் ஏற்பட்டு நாங்கள் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டு, திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி அந்த **புகார் அ.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. என்னை காட்டி மிரட்டிய கத்தியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும், என்னிடம் காட்டப்படும் **கத்தி அது தான் அது அ.சா.பொ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் வீட்டிலிருந்த தப்பி சென்ற சமயம் என் கழுத்தை பார்க்கும் போது கழுத்திலிருந்த 2 பவுன் தங்க செயினை காணவில்லை. அதனை குறிப்பிட்டு நான் புகார் அளித்தேன். நான் மீண்டும் வீட்டிற்க்கு வந்து பார்த்தபோது எனது செயின் அறுந்த நிலையில் வீட்டின் மூலையில் கிடந்தது.

மேற்படி 2ம் எதிரி ஆஜரின்மையால் அவரை அடையாளம் காண்பிக்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்